**பனை அபிவிருத்திச் சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பனை அபிவிருத்தி சபையின் (''சபை'' ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் ஆல் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் அன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகள் ஈடு | எதிர்காலத்தில் மீதி சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படலாகாது. எவ்வாறாயினும், ரூபா 727,828 ஆன வியாபாரக் கடன்பட்டோர் ரூபா 10,611,589 ஆன வியாபாரக் கடன் கொடுத்தோருக்கு எதிராக ஈடு செய்யப்பட்டிருந்ததுடன் மீதி ரூபா 9,883,761 வியாபாரக் கடன் கொடுத்தோராகக் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன் கொடுத்தோர் என்பன ரூபா 727,828 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | | |
| (ii) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் ஆல் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் அன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகள் ஈடு செய்யப்படலாகாது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் கூட்டுத்தொகை ரூபா 5,552,153 ஆன 02 செலவு மீதிகள் வியாபார பெறவேண்டியவைகளுக்கு எதிராக ஈடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, வியாபார பெற வேண்டியவைகள் மற்றும் வியாபார செலுத்த வேண்டியவைகள் என்பன ரூபா 5,552,153 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் மீதி சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், பயன்பாட்டிலுள்ள முழுமையாக தேய்மானமிடப்பட்ட ரூபா 105,028,848 பெறுமதியான சொத்துக்கள் இந்த ஏற்பாட்டிற்கு முரணாக பனை அபிவிருத்திச் சபையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. | சபையின் அங்கீகாரத்துடன் அந்தச் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 62,500,000 பெறுமதியான அரச மானியம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | முன்னைய ஆண்டில் காலக்கழிவு செய்யப்பட்ட 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 46,906,684 பெறுமதியான நிதிச் செயற்திட்டச் செலவு | கருத்துரை வழங்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுச் சீராக்கத்தின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் இது பின்னோக்கிச் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தவறான கணிப்பீடுகளின் காரணமாக ஆண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 1,515,028 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிக்கொடை ஒதுக்கம் மற்றும் மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைச் செலவுகள் அதே அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டில் தவறுகள் திருத்தப்படும். | பணிக்கொடை ஒதுக்கம் மற்றும் பணிக்கொடைச் செலவுகள் மிகைப்படுத்தப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ii) | ரூபா 65,947,747 பெறுமதியான முன்னைய வருடச் சீராக்கமானது உரிமை மாற்றங்கள் கூற்றில் சொத்துக்கள் மீதான மீள்மதிப்பீட்டு ஆதாயமாக தவறாகக் காட்டப்படடிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா 888,915,614 பெறுமதியான மூலதன மானியம் சபையின் மூலதனமாக தவறுதலாக கணக்கீடு செய்யப்படடிருந்தது. இதன் விளைவாக,காலக்கழிவிற்கான செலவுகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் பதிவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொடர்புடைய ஆதார ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளுக்கு இடையே நான்கு உருப்படிகள் தொடர்பாக ரூபா 270,606,433 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்படடது. | ஆதார ஆவணங்களை எதிர்வரும் வருடத்தில் சமர்ப்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். | அனைத்து மீதிகளையும் கணக்குகளுடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத ஆவண சான்றுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 35,336,480 பெறுமதியான மீதிகளின் இருப்பு மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணச் சான்றுகளை எதிர்வரும் வருடத்தில் சமர்ப்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். | கணக்காய்விற்குத் தேவையான அனைதது ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் 07 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட நிலுவையாக காணப்பட்ட ரூபா 9,747,265 ஆன மொத்த வியாபார கடன்பட்டோரின் கீழ் உள்ளடங்கியிருந்த 10 வியாபார கடன்பட்டோரின் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து, கடன்பட்டோர் மீதிகளை ஐயக்கடன்களாக பகுதி பகுதியாக ஈடு செய்யத் தொடங்கினோம். | நிலுவைத் தொகையை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் 02 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட நிலுவையாக காணப்பட்ட ரூபா 3,492,775 ஆன மொத்த வியாபார கடன் கொடுத்தோரின் கீழ் உள்ளடங்கியிருந்த 06 வியாபார கடன் கொடுத்தோரின நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத்தொகையை நிதி இருப்பின் அடிப்படையில் செலுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் | தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

மிளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 24,786,100 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 33,538,883 ஆக காணப்பட்டது. எனவே நிதி விளைவுகளில் ரூபா 8,752,783 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்து. விற்பனை மற்றும் விநியோக , உற்பத்திச் செலவுகள் குறைவடைந்தமையே இம்முன்னேற்றத்திற்கு காரணமாக அமைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மற்றும் 2017 நவம்பர் 24 இல் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட காணியொன்று மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வரும் 8 காணிகளின் உரிமையை மாற்றுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்கான நடவடிக்கைகள் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் நடைபெற்று வருகிறது | சபைக்குச சொந்தமான அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 805,000 பெறுமதியான பாஸ்டெரைஸர் பொறியொன்று மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட தன்னியக்க பிளவுப் பொறியொன்று நான்கு வருடங்களுக்கும் மேலாக செயலற்றதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இந்த இயந்திரங்கள் போத்தல் இனிப்புக்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும். | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.3 வாகன முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் 32 வாகனங்களின் தினசரி வாகன ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. | தினசரி வாகன ஓட்ட குறிப்புக்களை கணக்காய்விற்கு வழங்குவதற்கும், எதிர்காலத்தில் தவறு இடம்பெறாதிருப்பதை உறுதி செய்வதற்கும் நிர்வாகம் உடனடியாக முடிவு எடுததுள்ளது. | தினசரி வாகன ஓட்டக் குறிப்புக்கள் சரியான நேரத்தில் கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டும். |

**4 கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன நிதியாண்டின் முடிவிலிருந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் 219 நாட்கள் தாமதத்துடன் 2023 ஒக்டோபர் 05 அன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிரந்ததுடன் வரைவு ஆண்டறிக்கை 2023 நவம்பர் 17 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய முறைமை நடைமுறைப்படுத்தப் பட்டமையால் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தாமதமானது. எதிர்காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |